**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2022**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1930 இன் 10 ஆம் இலக்க இறப்பர் ஆராய்ச்சி கட்டளைச்சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 42 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உருப்படிகளை காட்டுவது ஒரு காலப்பகுதியிலிருந்து அடுத்த காலத்திற்கு மாற்றமின்றி இருக்க வேண்டும். ஆனால் 2022 திசெம்பர் 31 இல் சமர்பிக்கப்பட்ட உரிமை | தேறிய சொத்துக்களில் மாற்றம் தொடர்பான கூற்றை தயாரிக்கும் போது மொத்த மீள்மதிப்பீட்டுத் தொகை கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. | தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில், முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட ரூபா 180,438,029 மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை, மேலும் அது மீளாய்வாண்டின் மீள்மதிப்பீட்டு மிகையுடன் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மொத்த மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 4,447,449,850 ஆக காட்டப்படிருந்தது.

எனினும், சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் சபையால் பெறப்பட்ட ரூபா 57,865,800 மூலதன மானியங்கள் வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாமல் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில், கணக்கீடு செய்யப்பட்ட பிற்போடப்பட்ட வருமானமானது, மூலதன மானிய பெறுவனவுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்காக ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட பெறுமானத்தேய்வுத் தொகை மற்றும் அந்த மானியங்களிலிருந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவினம் என்பன ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட தொகையைத் தவிர, மீதமுள்ள தொகை மூலதன மானியத்தின் கீழ் கணகீடு செய்யப்பட்டுள்ளது. | மூலதன மானியங்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 373,671 மற்றும் ரூபா 10,574 தொகையான முறையே வாகன உதிரிப் பாகங்கள், பராமரிப்புப் பொருட்கள், துப்பரவாக்கிகள் மற்றும் காகிதாதி போன்ற 75 அசையா இருப்புப் பொருட்களுக்காகவும் தலைமை அலுவலகத்தின் இறுதி பௌதீக இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட 08 சேதமடைந்த கையிருப்பு பொருட்களிற்காக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | பிரதான களஞ்சியத்தின் பௌதீக கையிருப்பில் உள்ள அசையாத மற்றும் சேதமடைந்த இருப்பு 2022 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்தது. எனினும், அசையாத மற்றும் சேதமடைந்த இருப்புப் பொருட்களை மீண்டும் கண்டறிந்து 2023 ஆம் ஆண்டில் அதற்கேற்ப சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரக்கிருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்களின் மொத்த மீள்மதிப்பீட்டு ஆதாயம் ரூபா 4,276,065,636 ஆக இருந்த போதிலும் அது ரூபா 4,267,011,823 ஆகக் | மீள்மதிப்பீட்டு ஆதாயத்தைக் கணிப்பிடும் போது, ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு தொகை சீர்செய்யப்பட்டிருக்காததால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த வேறுபாட்டை | மீள்மதிப்பீட்டு ஆதாயம் சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருந்தது, இதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் மீள்மதிப்பீட்டு ஆதாயம் ரூபா 9,053,813 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | அந்த ஆண்டில் கைதவிர்க்கப்பட்ட வாகனங்கள் மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களிற்காக ரூபா 9,591,117 பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் மற்றும் வாகன விற்பனை பெறுமதிகளைக் கணக்கீடு செய்யும் போது ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு தொகை சீர்செய்யப்பட்டிருக்காததால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அந்த வேறுபாட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டில், இறப்பர் ஆராய்ச்சி சபையால் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 5,214,500 கிரயமானது தீர்க்கப்படாமல் ஏனைய பெறவேண்டியவைகளாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டது. | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்திற்கு அதன் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக முற்பணமாக ரூபா 5,214,500 முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் இதற்கான உரிமை சம்பந்தப்பட்ட நிறுவகத்துக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவால் அறிக்கை கோரப்பட்டு, அந்த அறிக்கையின் அடிப்படையில், எதிர்காலத்தில் இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய நிறுவனங்களுடன் இணக்கம் தெரிவித்து மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரத்மலானை அலுவலகம் பரீட்சிப்பு அறிக்கைகளை வழங்குவதற்கு முன்னரோ அல்லது அதன் போதோ கட்டணங்களை அறவிடும் ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றாததால், 03 ஆராய்ச்சி திணைக்களங்களால் 47 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட பரீட்சிப்பு அறிக்கைகளுக்காக அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 அளவில் ரூபா | இதற்காக முறையான அமைப்பு 2023.04.24 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைப் புறக்கணித்து, திணைக்களங்கள் வழங்கிய கடன் மீதிகளை மூன்று மாத காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள ஆராய்ச்சிக் கட்டணங்கள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். இதுபோன்ற குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 205,375 அறவிடப்பட வேண்டியுள்ளது. | | |
| (இ) | 10 ஆண்டுகளுக்கும் மேலாக ”கடன்பட்டோர் தீர்வு” என்ற கணக்கில், 07 கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 3,408,310 ஆக இருந்ததுடன், பிணைமுறி நிபந்தனைகளை மீறிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,286,279 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து மீதிகளை அறவிடுவதற்கு நீண்டகாலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பணத்தை அறவிட முடியவில்லை. எனவே, மீதியை அறவிடுவதற்காக இடர் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க 100 சதவீத ஐயக்கடன் ஏற்பாட்டை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | உடனடியாக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அறவிடப்பட முடியாத ஐயக்கடன்களுக் காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனா ன தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு | கல்விச் செயற்பாடுகளுக்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறையை எடுத்ததன் பின்னர் பிணைமுறி நிபந்தனைகளை மீறிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 29 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக சபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,755,341 தொகை 2023 மே 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்கள் மீது சட்டபூர்வ வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஏனைய உத்தியோகத்தர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருகிறது. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் பிணைமுறி நிபந்தனைகளை மீறிய உத்தியோகத்தர் களிடம் இருந்து உரிய தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நி.பி. 880 (i) | குறிப்பிடப்பட்ட பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பை மேற்கொள்ள வேண்டிய | பிணை தொகையை நிறுவனத்தில் வைப்பிலிட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் | குறிப்பிடப்பட்ட பிரமாணங்களின் பிலரகாரம் பிணை வைப்பை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பை சபை மேற்கொண்டிருக்கவில்லை. | இருந்து பிணை பணத்தை பெற்றுக்கொள்வதற்கு ஆரம்பம் முதலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக இனிவரும் முகாமைத்துவக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு அந்த தீர்மானம் அமுல்ப்படுத்தப்படும். | வழங்க வேண்டிய உத்தியோகத்தர் களிடம் இருந்து பிணை வைப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) நி.பி. 891 (i) | பிணை வழங்க வேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் உள்ளடங்கிய பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இது எதிர்காலத்தில் அமுல்ப்படுத்தப்படும். | அனைத்து விபரங்களும் உள்ளடங்கிய பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டது. | | | |
| | (i) நி.பி. 371(2)(ஆ) | ஒரு குறிப்பிட்ட பணிக்காக, பதவியணி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே ஒரு சந்தர்ப்பத்தில் அதிகபட்சம் ரூபா 100,000 வரை உபகட்டுநிதி வழங்கப்பட முடியும், ஆனால் அதற்கு முரணாக, மூன்று சந்தர்ப்பங்களில், இறப்பர் ஆராய்ச்சி சபையின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 200,000 படி இரண்டு உபகட்டுநிதிகளும் ரூபா 300,000 ஆன ஒரு உபகட்டுநிதியும் வழங்கப்பட்டது. | ஒரு சர்வதேச மாநாட்டின் செலவினங்கள் விசேட முற்பணங்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அங்கு மதிப்பிடப்பட்ட தொகை வழங்கப்படுகிறது. கொடுக்கப்பட்ட தொகைக்கும் உண்மையான கிரயத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு மீண்டும் வைப்புச் செய்யப்படுகிறது. இதுபோன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் செலவிடப்படும் பணத்தை சரியாக மதிப்பிட முடியாததால், இதுபோன்ற குறைபாடுகள் எழுந்துள்ளன. | உரிய நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உபகட்டுநிதி வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி. 371(4) | கணக்கீட்டு உத்தியோகத்தர் குறிப்பிட்ட மற்றும் தேவையற்ற பணிகளுக்கு உபகட்டுநிதிகளை பெறக்கூடாத போதிலும், தேவை குறிப்பாக இனங்காணப்படாத காரணத்தால், 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 127,500 உபகட்டுநிதி செலவிடப்படாமல் மீளளிக்கப்பட்டது. 18 சந்தர்ப்பங்களில், வழங்கப்பட்ட முற்பணத்தில் 45 முதல் 83 சதவீதம் வரை மீளளிக்கப்பட்டது. பணத்தை மீளளிப்பதற்கு 04 மாதங்கள் எடுத்த சந்தர்ப்பமும் அவதானிக்கப்பட்டது. | முற்பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் குறித்து அனைத்துப் பிரிவுகள்/ திணைக்களங்களுக்கு குறிப்பாணை மூலம் தெரிவிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, ஆனால் அது இணக்கமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளன. | உரிய நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உபகட்டுநிதி வழங்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 371(5) | வழங்கப்பட்ட உபகட்டுநிதிகள் பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் ரூபா 426,609 தொகையான 28 உபகட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு 14 நாட்கள் முதல் 49 நாட்கள் வரை தாமதமடைந்திருந்தது, | சிறுசெலவுக் காசு முற்பணத்தை வழங்குவதற்காக உள்ளக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் முரணான சந்தர்ப்பங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை செய்து கிடைத்த தகவலின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உபகட்டுநிதி வழங்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 6,367,158 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 15,873,555 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 9,506,397 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரி மானியங்கள் ரூபா 28,840,000 ஆல் குறைவடைந்தமை, சம்பளங்களும் கூலிகளும் மற்றும் ஊழியர் நலன்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் முறையே ரூபா 16,969,417 ஆலும் ரூபா 8,162,135 ஆலும் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 2.2 வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | அதிகரிப்பு/ (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| அரசாங்க மானியங்கள் | 394,650,000 | 423,490,000 | (28,840,000) | (7) |
| ஏனைய வருமானம் | 21,242,083 | 10,657,312 | 10,584,771 | 99 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 174,271,891 | 139,733,221 | 34,538,670 | 25 |
| தோட்ட வருமானம் | 133,143,628 | 118,624,133 | 14,519,495 | 12 |
| வழங்கல்கள் மற்றும் நுகரத்தக்க செலவினங்கள் | 29,029,011 | 24,033,699 | 4,995,312 | 21 |
| பராமரிப்பு செலவினம் | 57,795,485 | 49,633,350 | 8,162,135 | 16 |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில், நடைமுறை சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் என்பன முறையே 5.4:1 மற்றும் 4.9:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அவ் விகிதங்கள் முறையே 5.3:1 மற்றும் 4.9:1 ஆக இருந்தன. ரூபா 74,920,070 காசு மற்றும் காசிற்கு சமமானவையாக வைக்கப்பட்டதுடன் ரூபா 34,618,244 இந்த ஆண்டின் இறுதியில் வழங்குநர்களுக்கு முற்பணங்களாக வழங்கப்பட்டிருந்தன, இது இந்த நடைமுறை சொத்துக்கள் மற்றும் விரைவு சொத்து விகிதங்களின் உயர் பெறுமதிக்கு வழிவகுத்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் மொனராகலை குமாரவத்தை மற்றும் அளவ்வ நாரம்பொலவத்தை உப நிலையங்களில் ரூபா 16,213,367 கிரயத்தில் இறப்பர் ஆராய்ச்சி சபை அலுவலக கட்டிடங்களை நிர்மாணித்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்த போதிலும் அந்த காணிகள் சட்டபூர்வமாக ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையிடம் இருந்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மொனராகலை குமாரவத்தையில் உள்ள காணியின் உரிமைத்துவத்தை எமது நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை முன்னெடுப்பதற்கு தேவையான ஆதரவை வழங்குமாறு மொனராகலை பிரதேச செயலாளர் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையிடம் கோரப்பட்டுள்ளது. பொல்கஹவெல நாரம்பொலவத்த காணியின் உரிமைத்துவத்தை கையேற்பதற்கும் காணி சுவீகரிப்புக்கு உரிய அளவை கட்டணங்களை செலுத்துவதற்கும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | காணிகளின் சட்டப்பூர்வ உரிமைத்துவத்தை கையேற்றல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | சபை 2021 திசெம்பர் 31 இற்குள் டயர் ஆய்வுப் பிரிவை நிறுவுவதற்கு ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் மார்ச் மற்றும் மே மாதங்களில் அதற்காக ரூபா 29,907,471 பெறுமதியான 03 இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்தது. ஆனால் உரிய கட்டிடத்தை நிர்மாணிக்கத் தவறியதால், கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 வரையிலும் இந்த உபகரணங்கள் விளைவற்றிருந்தன. | இந்த உபகரணங்கள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றதுடன் ஆய்வு பணிகள் விரைவில் தொடங்கப்படும். | சொத்துக்கள் உடனடியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 196,300 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிறீட் வளையங்கள் ‘‘டயர் ஆய்வுக் கட்டிடம்’’ இன் நிர்மாணம் தொடர்பான நிர்மாண தளத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. | நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதால், மீண்டும் பயன்படுத்தும் வரை, அந்த இடத்தில் கொங்கிறீட் வளையங்கள் வைக்கப்பட்டுள்ளன. கட்டிட நிர்மாணம் தொடங்கும் போது இந்த வளையங்கள் பயன்படுத்தப்படும். | தாமதமின்றி டயர் ஆய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில், இறப்பர் தயாரிப்புக்களின் செயலாற்றலை பொதுத் தனியார் பங்குடமையின் கீழ் வணிக மாதிரியாக வடிவமைத்து மதிப்பிடுவதற்காக ரூபா 49.7 மில்லியன் கிரயத்தில் ‘‘வரையறுக்கப்பட்ட உறுப்பு பகுப்பாய்வு உருவகப்படுத்தல் நிலையம்’’ அமைக்கப்பட்டது. ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் டயர் மாதிரிகளை தயாரிப்பதில் விரும்பிய நோக்கத்தை இந்த நிலையத்தின் ஸ்தாபிப்பு அடைந்துகொண்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பான உடன்படிக்கை விதிமுறைகளை திருத்தம் செய்து மீண்டும் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையத்தில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியை தாமதமின்றி தொடங்க வேண்டும். |
| (உ) | அகலவத்தை தொழிற்சாலைக்கான மின் நிறுவல்கள் மற்றும் | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட இந்த நிர்மாணப் பணிகள் | இதுபோன்ற காலதாமதங்களை தவிர்ப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | இரத்மலானையில் உயிர்இரசாயனவியல் மற்றும் உடலியல் துறையின் திருத்தங்களாக ரூபா 6,334,344 கூட்டுமொத்த ஒப்பந்த பெறுமதியுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சபையால் தொடங்கப்பட்டு அதே 02 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இரண்டு ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் இதற்காக ரூபா 5,028,253 செலுத்தப்பட்டுள்ளது. | தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் பூர்த்திசெய்தல் சான்றிதழைப் பெற்றுச் சீர்செய்யப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டில், சபையின் தற்போதைய மின்சார வயரிங் முறைமையை நவீனப்படுத்துவதற்கு ரூபா 143,934 கிரயத்தில் 10 மின்கம்பங்கள் கொள்வனவு செய்யப்பட்டன, ஆனால் அந்த மின்கம்பங்களைப் பயன்படுத்தி திட்டமிடப்பட்ட பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | இந்த மின்சார கம்பிகளின் மின்கம்பங்கள் நிறுவப்பட்டு நிதி கிடைத்த பின்னர் கம்பிகளை இடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மின்சார வயரிங் முறைமை தாமதமின்றி நவீனப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | 2019 ஆம் ஆண்டில், கணக்கு பிரிவின் காப்பகங்களை நவீனப்படுத்துவதற்காக ரூபா 83,536 கிரயத்தில் 20 Dura Panel Board கொள்வனவு செய்யப்பட்டன, ஆனால் மீளாய்வாண்டின் இறுதியில் நோக்கத்திற்கு வெளியே 10 பலகைகள் பயன்படுத்தப்பட்டதுடன் 10 பலகைகள் விளைவற்றிருந்தன. | மீதமுள்ள Dura Panel Board நிறுவனத்தின் எதிர்கால பழுதுபார்ப்புகளுக்காக பயன்படுத்தப்படும். | கணக்கு பிரிவின் காப்பகங்கள் திட்டமிட்டவாறு நவீனப்படுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | 2022 சனவரியில் மொனராகலை உப நிலையத்தில் புகைக்கூடங்களை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட ரூபா 500,000 மானியத்தில் இருந்து 2022 யூலை, ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 448,450 செலவிடப்பட்டது. ஆனால் கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 27 இற்குள் நிர்மாணத்தை பூர்த்தி | துருசவிய நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 500,000 தொகை புகைக்கூடங்களை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு ரூபா 448,450 வேலைகள் பூர்த்தியடைந்த போதிலும் வழங்கப்பட்ட பணம் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, எதிர்காலத்தில் நிறுவனத்தின் நிதியைப் பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிட்டவாறு நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இறப்பர் பயிர்ச்செய்கையின் கீழ் ஊடுபயிர்களை மதிப்பிடுவது தொடர்பாக 02 ஊடுபயிர் மாதிரிகளை சோதிப்பதற்கு தாவர விஞ்ஞான துறை இலக்கிட்டிருந்த போதிலும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆய்வு நடவடிக்கைகள் மொனராகலை மற்றும் அம்பாறை பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எரிபொருள் பிரச்சனை காரணமாக போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டது. தற்போது அது தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது. இது வெற்றிகரமான முடிவுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 02 பழப் பயிர் பயிர்ச்செய்கை முறைகள் மற்றும் இடைநிலை வலயத்தில் இறப்பருடன் கூடிய வயல் பயிர் பயிர்ச்செய்கை முறை என்பன பரிந்துரைகளுக்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | திட்டமிட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தாவர விஞ்ஞான துறையால் லேடெக்ஸ் வெட்டும் மேம்பட்ட தொழில்நுட்ப முறையை அறிமுகப்படுத்தும் நோக்கத்திற்காக ரூபா 500,000 ஒதுக்கப்பட்டு, ஆண்டு இறுதியில் அதற்கான தரவு சேகரிப்பு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த நிதியைப் பயன்படுத்தி, பல மரப்பால் வெட்டும் நுட்பங்கள் சோதிக்கப்பட்டன. மரப்பால் வெட்டுவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பால் கறக்கும் இயந்திரமும் சோதனை செய்யப்பட்டது. கடந்த ஆண்டு இறுதியில் மோசமான வானிலை மற்றும் இயந்திரத்தின் தேவையான பராமரிப்பு காரணமாக, சேகரிக்கப்பட்ட தரவு போதுமானதாக இருக்கவில்லை. இந்த இயந்திரம் திருப்திகரமான முடிவுகளைக் காட்டியுள்ளதால், அதை நிறுவனத்தின் ஆராய்ச்சிக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தாவர விஞ்ஞான துறையின் முன்னேற்றத்தை | ஒரு ஆராய்ச்சிப் பிரிவாக, ஆராய்ச்சித் தரவு மற்றும் நிதித் தகவல்கள் எப்போதும் செயற்பாடுகளுக்காக | ஒவ்வொரு பணிக்கும் ஏற்படும் செலவினங்கள் தனித்தனியாக |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் போது, 08 பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் தொகை மாத்திரமே முன்வைக்கப்பட்டது, எனவே ஒவ்வொரு பணிக்கும் ஏற்படும் செலவினங்களை தனித்தனியாகக் கண்டறிய முடியவில்லை. | தனித்தனியாகப் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து, ஊழியர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. எனினும், 2023 இல் இந்த நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அடையாளம் காணக்கூடிய வகையில் சான்றுபடுத்தும் ஆவணங்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இறப்பர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையானது இறப்பர் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்வதில் 150 தொழில்முனைவோருக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது, ஆனால் 60 தொழில்முனைவோர் மாத்திரமே பயிற்சி பெற்றனர். இது இலக்கு தொகையில் 40 சதவீதம் ஆகும். | 2022 ஆம் ஆண்டில், 60 தொழில்முனைவோரின் கோரிக்கையின் பேரில், அவர்களுக்கு இறப்பர் தொடர்பான பொருட்களின் உற்பத்திக்கான பயிற்சி அளிக்கப்பட்டது, மேலும் 16 தொழில்துறையினரின் கோரிக்கையின் பேரில், இறப்பர் கலவைகள்/ பொருட்களின் உற்பத்தியில் எழுகின்ற சிக்கல்கள் தீர்க்கப்பட்டன. 20 தொழில்துறையினர்/ தோட்ட கம்பனிகளின் கோரிக்கையின் பேரில், மூல இறப்பர்/ இறப்பர் கலவைகள்/ இறப்பர் பொருட்களுக்கான சோதனைகள் நடாத்தப்பட்டு தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இது சதவீதமொன்றாக 64 சதவீதமானதுடன் 60 தொழில்முனைவோரில் சிலர் தற்போது உள்ளூர் சந்தைகளுக்கு இறப்பர் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்வார்கள். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிட்ட பணிகள் உரிய கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (உ) | செயல்நடவடிக்கைத் திட்டம் 2022 இன் பிரகாரம் உயிர்மருத்துவப் பிரிவு, தகுந்த புள்ளியிவிபரவியல் முறைகள் மூலம் ஆராய்ச்சி செயற்திட்டங்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும், இறப்பர் வளரும் பகுதிகளில் சிறந்த முடிவுகளுக்கு பருவநிலை மாற்றம் மற்றும் மாறுபாடு பற்றிய அறிவை மேம்படுத்துவதற்கும் ரூபா 360,000 தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது, ஆனால் | பயோமெட்ரிக் (biometric biometric) துறைக்கு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் சில ஒதுக்கீடுகள் தரவு சேகரிப்புக்கு பயன்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டது, ஆனால் தரவுகளை சேகரிப்பதற்கு அவர்கள் அதிக அளவில் இறப்பர் விளையும் பகுதிகளுக்கு செல்ல வேண்டியிருந்தது. ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக அந்த | திட்டமிட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் நிதி முன்னேற்றம் ரூபா 190,000 ஆகும். இது ஒதுக்கப்பட்ட தொகையில் 52 சதவீதமாகும். | நடவடிக்கைகளுக்கான தரவுகளை சேகரிக்க முடியவில்லை. மேலும், அந்நியச் செலாவணி நெருக்கடியால், நாம் பயன்படுத்திய மென்பொருளை புதுப்பிக்க முடியவில்லை. எனவே, ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து அந்த நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட பணம் மட்டுப்படுத்தப்பட்டது. | |
| (ஊ) | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்க பிரிவு 2 நாடுகளுடன் பலதரப்பு குளோன்களை பரிமாறுவதற்கு திட்டமிட்டது, ஆனால் அந்த வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இதற்காக 4 நாடுகளுடன் கலந்துரையாடிய போதிலும் 2022 இல் அந்த நாடுகளின் நிலவரத்தின் அடிப்படையில் அந்த குளோன்களை பரிமாறிக்கொள்வதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்படவில்லை. | திட்டமிட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்க பிரிவு 150 புதிய மரபணு வகைகளை உருவாக்குவதற்கு திட்டமிட்டிருந்தது, ஆனால் 68 மரபணு வகைகள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. | மோசமான வானிலை மற்றும் இலையுதிர்வு காரணமாக பல மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட பூக்கள் உதிர்ந்தன, மேலும் 1398 செயற்கை மகரந்தச் சேர்க்கைகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் 68 மாத்திரமே வெற்றி பெற்றன. இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பின்பற்றிய போதிலும், மோசமான சுற்றுச்சூழல் நிலைமை காரணமாக, இந்த சிக்கல் நிலைமைகள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளப்படுகின்றன. | திட்டமிட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தாவர நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் பிரிவினால் பௌதீக இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன, ஆனால் 2022 திசெம்பர் 31 இல் அடைந்துகொள்ளப்பட்ட இலக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்ள வேண்டும். மேலும் அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2022 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தாவர நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் துறை, இறப்பர் பெருந்தோட்டத்தில் வெள்ளை வேர் நோயை எதிர்த்துப் போராடுவதற்கான மூலோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தையும், குறைந்த தீவிர அறுவடை முறைமைகளை (LIH) அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்தையும் 2022 இன் இறுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு இலக்கிட்டுள்ளதுடன் முறையே ரூபா 18.52 மில்லியன் மற்றும் ரூபா 6.69 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 2022 திசெம்பர் 31 வரை, அந்த செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் 2022 திசெம்பர் 31 வரை, அந்த செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு வரையிலான இந்த செயற்திட்டம் தொடர்பான அனைத்து இலக்குகளும் எட்டப்பட்டுள்ளன. ஆனால், 2022 இல் தேவையான ஒதுக்கீடுகள் கிடைக்காததால், அறிவுப் பகிர்வு பணியை மேற்கொள்ள முடியவில்லை. | திட்டமிட்ட இலக்குகளை உரிய காலத்திற்குள் அடைந்துகொள்ள வேண்டும். மேலும் அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் மிக முக்கியமான பதவிகளில் ஒன்றான பணிப்பாளர் பதவிக்கு 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 04 வருடங்களுக்கு மேலாக வழக்கமான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. பிரதிப் பணிப்பாளர் ஆராய்ச்சி (தொழில்நுட்பம்) அந்த பதவியில் பதிற்கடமை உத்தியோகத்தராக பணிபுரிகிறார். | பணிப்பாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அங்கீகாரம் பெற்ற பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும். | சபையில் உள்ள அத்தியாவசிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு விரைவுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி வெற்றிடமாக இருந்ததுடன், 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை நியமனம் வழங்கப்படவில்லை. | இந்த வெற்றிடத்தை நநிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் உள்ள அத்தியாவசிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில், சபையின் ஆராய்ச்சிப் பிரிவுக்கு 69 ஆராய்ச்சித் தலைவர்கள், பிரதம ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர், ஆனால் 5 ஆராய்ச்சி பிரிவுத் தலைவர்கள், 12 பிரதம ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், 13 சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் 14 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் என 44 ஆராய்ச்சிப் பிரிவு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருந்தனர். இது அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் 63 சதவீதமாகும். | இந்த உத்தியோகத்தர்களில் இருந்து ஐந்து (05) ஆராய்ச்சி பிரிவுகளின் தலைவர்கள்/ முதன்மை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்/ சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல் விரைவுபடுத்தப்பட வேண்டும். ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது தேவைப்பாட்டை மறுபரிசீலனை செய்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்த வேண்டும். |